**தலைப்பு 259 – மாத்தளை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

மாத்தளை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜூன் 21 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் அமைந்தனவாகும். அவ்வாறான செவ்வை பார்த்தல்களின் நோக்கெல்லை மற்றும் அளவு என்பன எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்னும் வரையறைக்குட்பட இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 148,149,150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கிசையப் பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு ஆகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்கள் அல்லாத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்து, நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மாவட்டச் செயலகத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 768.15 மில்லியன் ஆகும். அதில் ரூபா 622.44 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 18.97 சதவீதமான ரூபா 145.71 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வமாறு.

**2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | சேமிப்பு, தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 556.15 | 552.48 | 3.67 | 0.66 |
| மூலதனம் | 212.00 | 69.96 | 142.04 | 67.00 |
| மொத்தம் | 768.15 | 622.44 | 145.71 | **18.97** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்**

பல்வேறு பணிகளுக்காக மாத்தனை மாவட்டச் செயலகத்திற்கு 21 அமைச்சுக்களும் 17 திணைக்களங்களுக்கும் மொத்தமாக ரூபா 2,652 மில்லியன் நிதியேற்பாட்டை வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவளவில் அதில் ரூபா 1,837 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 815 மில்லியன் (தேறிய) நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது 31 சதவீதம் ஆகும்.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 25901 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதியும் பின்வருமாறு

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது | அதிகுறைந்த வரம்பு | உள்ளவாறானது | அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 41.75 | 38.23 | 32.75 | 33.55 | 150.00 | 126.24 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் 06 பொது வைப்புக் கணக்குகளது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 198.80 மில்லியன் ஆகும். விபரம் வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0054/000 | 0.88 |
| 6000/0000/00/0002/0072/000 | 0.71 |
| 6000/0000/00/0013/0044/000 | 64.92 |
| 6000/0000/00/0016/0024/000 | 111.88 |
| 6000/0000/00/0017/0005/000 | 19.53 |
| 6000/0000/00/0018/0031/000 | 0.88 |
| மொத்தம் | 198.80 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதியதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஏடுகளையும் புத்தகங்களையும் பேணாமை

மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள 02 பிரதேச செயலகங்கள் பின்வரும் பதிவேடுகளை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டன.

| நிறுவனம் | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| லக்கல பல்லேகம பிரதேச செயலகம் | விடுமுறைப் பதிவேடு | தாபனவிதிக்கோவையின் XII அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு |
| உக்குவெல பிரதேச செயலகம் | ஓய்வூதிய அநாதைச் சிறுவர் பதிவேடு | ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 13/2010 |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் அளித்தல்

மீளாய்வாண்டின்போது மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அக் கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 117,000,000 ஆகும்.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டுக் கணக்கு

மூலதனச் செலவினத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகர நிதியேற்பாடு ரூபா 150,000,000 ஆகும். இதனைப் பயன்படுத்துவதற்கு முறைப்படி திட்டமிடப்படாமையால் இதில் ரூபா 9,500,000 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் குறித்த பணி நிறைவேற்றப்படாது நிதியேற்பாட்டில் ரூபா 140,500,000 சேமிப்புக்குள்ளானது.

#### 3.3.2 ஏனைய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்கள் வழங்கிய நிதியேற்பாடு

ஏனைய அமைச்சுக்களும் திணைக்களங்களும் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கிய நிதியேற்பாடு பயன்படுத்தப்படுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு

(அ) 2014 ஆம் ஆண்டின்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் பல்வேறு செயற்திட்டங்களுக்குமென 08 பிரதேச செயலகங்களால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,047,508 பெறுமதியான 1465 வகைப் பொருட்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் நலன்பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்படாது பயனற்றிருந்தன.

(ஆ) 2014 ஆம் ஆண்டின்போது மாவட்டச் செயலகத்தாலும் 09 பிரதேச செயலகங்களாலும் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களில் ரூபா 552,587,882 பெறுமதியான 377 செயற்திட்டங்கள் தொடர்ந்தவாறிருந்தன. அந்த 377 செயற்திட்டங்களில் 169 செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றை அமுலாக்கும் போது 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 138,140,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாத்தளை மாவட்டச் செயலகத்தாலும் தம்புள்ள பிரதேச செயலகத்தாலும் ரூபா 5,824,190 கூட்டுத்தொகையுடைய 02 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 26,595,856 சேமிப்புக்கப்பட்டிருந்தது.

(இ) வில்கமுவ பிரதேச செயலகம் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தோடு இணைந்தாற்போல தேவகிரிய கும்புறுபொல மயானத்திற்குச் செல்லும் பாதையைக் கொங்கிரீட் இட ரூபா 490,000 நிதி ஏற்பாடு செய்திருந்தது. அவ் வீதியின் முதல் 8 மீட்டர் அளவிலான பாதம் குறித்த நியமத்திற்கமையத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இவ் வீதிகளில் வெடிப்பு ஏற்பட்டு குழிகள் தோன்றியிருந்தன. இதனால் மேற் தளத்தை மட்டப்படுத்துவதற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 9,212 மற்றும் குறித்த பகுதியின் வீதியைக் கொங்கிரீட் இடுவதற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 51,960 என்பன பயனற்ற செலவினமாகின.

(ஈ) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் லக்கல பல்லேகம பிரதேச செயலகத்தால் முறையே ரூபா 1,580,000 மற்றும் ரூபா 980,000 என்பன செலவிடப்பட்டு வெல்லேவெல சேவா பியச மற்றும் இலுக்கும்புற சனசமூக நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மதிப்பீட்டின் பிரகாரம், அக்கட்டிடங்களின் யன்னல்களுக்கும் கதவுகளுக்கு முதலாந்தர மரப்பலகையால் அமைய வேண்டுமாயினும், நேரடிப் பரிசோதனையின்போது யன்னல்களும் கதவுகளும் இனங்காண முடியாத, முதிர்ச்சியடையாத, மரப்பலகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(உ) அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகம் ரூபா 463,005 செலவழித்து பல்லே அஸ்வெத்துவ பட்டகொல்ல ஓடையையும் வரம்புகளையும் தயாரித்திருந்தது. ஓடை செல்லும் பாதையில் இறுதி 32 மீட்டர் பகுதியில் கொங்ரீட் இடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஓடை செல்லும் பாதையானது உசிதமான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படாதும் ஓடை செல்லும் பாதையைத் தயாரித்த கொங்கிரீட்டின் அளவு தேவைக்கு அதிகமான உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையாலும் நீர் முறையாக வழிந்தோடாது ஓடைக்கான பாதை திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி அபிவிருத்தி முன்மொழிதலின் கீழ் தம்புள்ள பிரதேச செயலகத்தால் இனாமலுவ கிராமிய சிறுவர் மற்றும் மகளிர் சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,960,344 மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 1,477,148 செலவில் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கட்டிடச் சுவரை மட்டுப்படுத்தாமை சகல துணைப்பாகங்களுடன் கூடிய யன்னலையும் கதவுகளையும் ஏனைய துணைப்பாகங்களையும் பொருத்தாமையால் இக்கட்டிடமானது 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 25901 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குத் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கமைய அத் தினத்தில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகவுள்ள மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 1,302,681 ஆகும். அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 14 ஆண்டுகளானவையான போதும் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதிலான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையிலேயே இருந்தன.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.5.1 வருடாந்தச் செயலாற்றல் அறிக்கை

2002 செப்டெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கையைப் மாவட்ட செயலகம் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், அவ்வறிக்கையானது 2016 ஜுன் 14 ஆந் திகதியே அமைச்சரால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

### 3.6 சொத்து முகாமைத்துவம்

மாவட்டச் செயலகமும் 03 பிரதேச செயலகங்களும் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்தக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 01 | 1 ½ ஆண்டுகள் |
| (ii) | இயந்திர சாதனங்கள | 02 | 06 மாதங்கள் முதல் 1 ½ ஆண்டுகள் வரை |

**(ஆ) பத்கம்பல அரிசி தயாரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்**

2007 மற்றும் 2008 ஆம் அண்டுகளில் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்பட்ட பத்கம்பல அரிசி தயாரிப்பு நிலையம் 2010 ஆம் ஆண்டளவில் ரூபா 1,673,219 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அக்கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டத்தின் பொருட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம், சூடு மிதிக்கும் இடம், நீர்த்தாங்கி என்பவற்றுடன் 02 அரிசி உற்பத்தி இயந்திரங்கள் என்பன பயன்படுத்தப்பட்டிராமையால் அழிவுறும் அபாயத்தை நோக்கியிருந்தன. ரூபா 330,000 பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களை ரூபா 40,000 ஆக மதிப்பீடு செய்தமையால் ரூபா 290,000 நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக, செயற்திட்டத்திற்கான ஒட்டு மொத்தச் செலவினம் பயனற்றதாக இருந்தது.

**(இ) புடவைக் கைத்தொழில் நிலையத்தை ஆரம்பிக்காமை**

மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாவுல பிரதேச செயலகம் புடவைக் கைத்தொழில் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக ரூபா 1,456,607 பெறுமதியான 43 தையல் இயந்திரங்களையும் 11 கத்தரிக்கோல்களையும் 2014 திசெம்பர் 31 அன்று கொள்வனவு செய்திருந்தது. 2016 ஜூன் மாதமளவிலும் புடவைக் கைத்தொழில் நிலையம் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

**(ஈ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

நாவுல பிரதேச செயலகம் 2008 ஆம் ஆண்டில் ரூபா 625,338 செலவில் நிர்மாணித்த நீர்ச் செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய ரூபா 65,000 பெறுமதியான தண்ணீர் மோட்டார் நாவுல பிரதேச சபையின் உப தலைவரால் எடுத்துச் செல்லப்பட்டு மீளாய்வாண்டு இறுதியில் 06 ஆண்டுகள் முடிவடைந்திருந்தன. அது தொடர்பாகச் சட்டபூர்வ நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) கணக்கிலிடப்படாத சொத்துக்கள்**

2015 திசெம்பரில் சீன அரசிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட டீசல் மின் பிறப்பாக்கி மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

**3.7 தீர்த்து வைக்கப்படாத சொத்துக்கள்**

மாவட்டச் செயலகம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஈடுபட்டிருந்த ஓராண்டிற்கும் குறைவாக நிலவி வரும் திர்த்து வைக்கப்படாத பொறுப்புகள் ரூபா 895,281 ஆகும்.

**3.8 இணங்காமை**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| (i) XIX அத்தியாயத்தின் 5.4 மற்றும் 5.4.1 ஆம் பிரிவுகள் | - | வீடுகள் தொடர்பான கோவைகளில் துணைவரின் விபரம் உத்தியோகத்தரின் குடியியல் நிலைமை தொடர்பான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமையால், துணைவரது வாடகை அறவீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 880 | 50,000 | கலேவெல பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 05 பேரிடமிருந்து பிணைப் பணம் பெறப்படவில்லை. |
| (iii) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | | |
| 2013 செப்டம்பர் 20 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 17,488 (மாதாந்தம்) | பல்லேபொல பிரதேச செயலகத்தில் அநாதைச் சிறுவருக்குரிய ஓய்வூதியம் தாயாரின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) வரித் தேவைகளுடன் இணங்காமை**

அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், பெறுமதி சேர் வரியைக் கொடுப்பனவு செய்ததன் பின்னர் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அக் கொடுப்பனவு தொடர்பான விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடன், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2 பிரதேச செயலகங்களில் 6 சந்தர்ப்பங்களில் பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவாகிய ரூபா 11,377 தொடர்பான விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

**3.9 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், மற்றும் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடுல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது வெளியாகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுல்

மாவட்டச் செயலகமும் 03 பிரதேச செயலகங்களும் பின்வரும் செயற்திட்டங்களை ஆரம்பித்திருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்காததற்கான காரணம், சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| கன்சரபொல குடிநீர்த் திட்டம் (இரத்தோட்டை) | 500,000 | 2014 ஆம் ஆண்டு | நீர்த் தோற்றுவாயிலிருந்து நீரைப் பெறுவதில் நிலவிய சிக்கலான தன்மை |
| கெடிகஸ்வலான திரு.எம்.ஜீ. முதன்நாயாகா வீட்டின் முன்னாள் மதகையும் வான் கதவுகளையும் தயாரித்தல் (தம்புள்ள) | 600,000 | 2015 ஆம் ஆண்டு | ஆரம்பிப்பதற்கு போதிய கால அவகாசம் இல்லாமை |
| கைகோலே வீதியை நிர்மாணித்தல் (பல்லேபொல) | 600,000 | 2014 ஆம் ஆண்டு | கிராமத்தவர்களது ஊக்கமின்மை |
| தெம்பிலிதெனிய வடக்கு நீர்த்திட்டத்திற்கு மோட்டார் ஒன்றை வழங்குதல் (பல்லேபொல) | 700,000 | 2014 ஆம் ஆண்டு | நிதியேற்பாடின்மை |
| திவுல்கமுவ நீர்த்திட்டத்தை முன்னேற்றுதல் (பல்லேபொல) | 500,000 | 2014 ஆம் ஆண்டு | நிதியேற்பாடின்மை |
| அலுத்கம பிரிவின் ஹப்புகஸ்யாய தலாகொலயாயே வீதியை அமைத்தல் (பல்லேபொல) | 300,000 | 2014 ஆம் ஆண்டு | சீரற்ற காலநிலை |
| மானின்கமுவ மேற்கு வீதியை அபிவிருத்தி செய்தல் (பல்லேபொல) | 300,000 | 2014 ஆம் ஆண்டு | சீரற்ற காலநிலை |
| கொடவால கம்மெத வடக்குச் சந்தி வரையான வீதியை அபிவிருத்தி செய்தல் (பல்லோபொல) | 300,000 | 2014 ஆம் ஆண்டு | சீரற்ற காலநிலை |
| பணடாரபொல மஹா வித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மாவட்டச் செயலகம்) | 8,250,000 | 2015 ஆம் ஆண்டு | மதிப்பீடு செய்யப்படாத வேலைகள் செய்யப்பட்டமை |
| கல்தொடே கல்வேஹன சியம்பலாகஹயாய மற்றும் எஹலகலயாயவிற்குச் செல்லும் வீதியில் சிறு கற்களைப் பதித்துத் திருத்தம் செய்தல் | 194,690 | 2014 ஆம் ஆண்டு | காணிப் பிரச்சினையும் சங்க உத்தியோகத்தர் சபை மாற்றமடைந்தமையும் |
| | 12,244,690 | | |

**(ஆ) செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்யாது கைவிடுதல்**

---

பின்வரும் செயற்திட்டங்களை 03 பிரதேச செயலகங்கள் ஆரம்பித்திருந்த போதும், அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | 2015.12.31 இல் உள்ளவாறான செலவினம் | கைவிடுவதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| ----------------------------- | ----------------------------- | ----------------------------- | ----------------------------- | ----------------------------- |
| | ரூபா | | ரூபா | |
| மானின்கமுவ பலநோக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (பல்லேபொல) | 1,500,000 | 2014 | 252,423 | நிதியேற்பாடின்மை |
| கென்ட் வத்த வீதியை நிர்மாணித்தல் (பல்லேபொல) | 500,000 | 2014 | 66.510 | நிதியேற்பாடின்மை |
| எல்கடுவ நகரில் விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தல் (உக்குவெல) | 6,000,000 | 2014 | 2,206,686 | நிதியேற்பாடின்மை |
| கலல்பிட்டிய ஹெலபோசனசாலை (உக்குவெல) | 3.527,900 (நிதியேற்பாடு பெறப்பட்டது 2014/2015) | 2014 | 3,527,900 | நிதியேற்பாடு போதாமை |
| கலஉடஹேன மற்றும் பிரண்டிகல பிரதேசத்தைச் சுற்றாடல் வலயமாக அபிவிருத்தி செய்தல் (உக்குவெல) | 5,000,000 | 2014 | 1,311,652 | வினைத்திறன் இன்மையால் ஏற்பட்ட அசாதாரண தாமதம் |
| லேனதொர வடக்கு சேவா பியசவை நிர்மாணித்தல் | 1,250,000 | 2015.10.08 | 218,431 | சீரற்ற காலநிலை காரணமாக குறித்த திகதியில் வேலையைப் பூர்த்தி செய்ய முடியாமையும் 2015 ஆம் ஆண்டில் அதனைத் தொடர்வதற்கான அனுமதியைப் பெற்றிராமையும் |
| நிக்கவட்டவன சிகிச்சை நிலையத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல் | 1,250,000 | 2015.11.02 | 351,625 | சீரற்ற காலநிலை |

| | | | | |
|---|---|---|---|---|
| (தம்புள்ள) | | | | |
| காயன்வெல குளத்தை ஆழமாக்குதல் (தம்புள்ள) | 1,184,165 | 2015.10.30 | 407,841 | கமநல சேவைகள் திணைக்களம் வேலையை இடைநிறுத்தியமை |
| பெரலிகலக் கரையைக் கட்டும் வேலை (தம்புள்ள) | 946,379 | 2015.10.28 | 314,525 | சங்க உத்தியோகத்தர்கள் மாற்றம் பெற்றதால் செயற்திட்டத் தொகைக்கு வேவைலையை நடாத்த இணங்காது போனமை |
| | -------------------------------- | | ------------------------ | |
| மொத்தம் | 21,158,444 | | 8,657,953 | |
| | ============ | | ======== | |

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றம் இல்லாது போன செயற்திட்டங்கள்**

நிர்மாண வேலைகளுக்கு பல்வேறு நிறுவனங்களுக்கும் இலங்கை மின்சார சபைக்கும் பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் அப் பணிகள் நிறைவேற்றப்படுதல் தொடர்பாக முறையான செயல் முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(i). உக்குவெல பிரதேச செயலகம் 02 மின்சாரச் செயற்திட்டங்களுக்கு 2014 ஆம் ஆண்டின் போது இலங்கை மின்சார சபைக்கு ரூபா 617,824 கொடுப்பனவு செய்திருந்தபோதும், 2016 மார்ச் 04 ஆந் திகதியளவிலும் குறித்த மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii). உக்குவெல பிரதேச செயலகத்திற்குரிய கலஉடஹேன மற்றும் பிரண்டிகல ஆகியவற்றைப் பிரதேச சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்ப பூங்கா நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கென ரூபா 5,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. தேசிய பூங்காத் திணைக்களத்திற்கும் ஏனைய ஆரம்ப நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குமென 04 நிறுவனங்களுக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 1,311,652 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 மே மாதமளவிலும் அதன் நிர்மாண வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. பூங்காவை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கு தேசிய பூங்காத் திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட பணம் அவர்களது வைப்புக் கணக்கில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகப் பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 3.10 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

**(அ) பிரதான பணிகளுக்கு முரணான நடவடிக்கைகள்**

மாவட்டச் செயலகம் தனது நோக்கங்களுக்கு உரிய பணிகளுக்கு அப்பால் செயற்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது அவ்வாறு வெளியாகிய சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 8,763,115 செலவில் வில்கமுவ பிரதேச செயலகப் பிரதேசத்தில் கலாசார நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும், மக்கள் கூடும் இடத்திற்கு உசிதமானவாறு காற்றோட்டமும் வெளிச்சமும் பெறக் கூடிய விதத்தில் இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிராததுடன் புறத்தே இருந்து பார்க்கும் போது ஏதோ ஒரு களஞ்சிய நிலையம் போன்ற தோற்றத்தை அளித்தது. எவ்வாறாயினும், 2016 ஏப்ரல் மாதமளவிலேனும் இக் கட்டிடம் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ii) தம்புள்ள பிரதேச செயலகம் டீ.பீ.தென்னக்கோன் மன்றத்திற்கு 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நீண்டகால குத்தகையில் வழங்கிய காணியொன்றில் 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ரூபா 36 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து கலாசார நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அதன் பொருட்டு ரூபா 11,786,165 செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்கு 2015 ஆம் ஆண்டின்போது செலவினம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நேரடிப் பரிசோதனையின் போது, கட்டிடத்தின் ஆரம்ப மாதிரி மாத்திரமே தற்போது தயாரிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. காணியின் சர்ச்சையற்ற தெளிவான தன்மை, பொருத்தமான ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யாமை அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றாமை போன்ற காரணங்களால் 02 ஆண்டுகளுக்கு மேலாக எதிர்பார்த்த நோக்கைப் பூர்ததி

செய்யாது கைவிடப்பட்டுள்ள நிலையில் உள்ளதொரு செயற்திட்டமாக கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(iii) அம்பன்கங்க கோறளை பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 1,960,000 செலவில் வர்ணப் புடவைக் கைத்தொழில் நிலைய நிர்மாண வேலைச் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தபோதும், தேவையான கை இயந்திரங்களையும் உபகரணங்களையும் வழங்கியிராமையால், 2016 ஜுலை மாதமளவிலேனும் செயற்திட்டத்தை ஆரம்பிக்க முடியாது கட்டிடத்தை குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியாது இருந்தது.

**(ஆ) போதியளவு பூர்த்தி செய்யப்படாத பிரதான பணிகள்**

---

பிரதான பணிகளை மாவட்டச் செயலகம் போதியளவு நிறைவேற்றியிராததுடன் அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் வருமாறு

(i) மாவட்டச் செயலகத்திற்குப் புதிய நிர்வாகத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கென ரூபா 550 மில்லியன் மதிப்பீட்டில் 2011 ஆம் ஆண்டின்போது முன்மொழியப்பட்டு 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 9 மில்லியன் மற்றும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 150 மில்லியன் என வருடாந்த நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந் நிர்மாண வேலை மந்தமாகவும் வினைத்திறனற்றும் இருந்தமையால் 2013 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடு பயன்படுத்தப்படாதும் 2015 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டில் ரூபா 9.5 மில்லியன் எஞ்சியுமிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான மாகாண எழுச்சித்திட்டத்தின் கீழ் உக்குவெல பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட விவசாயிகளுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ''வெயிலில் இருந்தும் மழையிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கான தலைக்கவசத்தை வழங்குதல்'' தொடர்பாக ரூபா 910,000 செலவில் 1400 இலைத் தொப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் ரூபா 455,000 பெறுமதியான 700 தொப்பிகள் 2016 மே இறுதியிலும் விநியோகிக்கப்படாதிருந்தன. பயன்படுத்தப்பட முடியாத அளவிற்கு அத்தொப்பிகள் உருக்குலைந்து பூச்சிகள் நிறைந்த நிலையில் களஞ்சியத்தில் இருந்தன.

(iii) உள்ளூர் உணவு மேம்பாடு மற்றும் பிரசித்தப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மக்களுக்கு உள்ளூர் உணவுகளை வழங்கும் நோக்குடன் உக்குவெல பிரதேச செயலகப் பிரிவில் ஹெல போசனசாலை ஒன்றை நிறுவுவதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,527,900 செலவிடப்பட்டிருந்தது. 2016 மார்ச் மாதமளவிலேனும் இக் கட்டிடம் குறித்த நோக்கத்திற்கெனப் பயன்படுத்தப்படாதிருந்தது.

**(இ) திட்டமிடல்**

---

2014 பெப்ரவரி 17 அந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கமத்தொழில் அலகின் மூலம் 8 நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்டபோதும், அதில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிராததுடன், 04 நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது போயின.

(ii) பராமரிப்பு மற்றும் புதுப்பித்தலின் கீழ் 22 அரசாங்க மனைகளைப் புதுப்பிப்பதற்கு மாவட்டச் செயலகம் திட்டமிட்டிருந்த போதும், 2015 ஆம் ஆண்டின்போது அதில் 15 மாத்திரமே நிறைவேறியிருந்தன.

### 3.11 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச செயலகங்கள் 02 இன் மூலம் நடாத்தப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்தனவாக இருந்தன. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவ்வாறு புலனாகிய கொடுக்கல் வாங்கல்களின் விபரம் வருமாறு

(அ) லக்கல பல்லேகம பிரதேச செயலகப் பிரிவில் கலுகங்கை செயற்திட்டத்திற்குக் காணிகளைச் சுவீகரிக்கும் இடங்களில் உள்ள மக்களுக்கு இழப்பீட்டை வழங்கி மக்கள் அவ்விடங்களைவிட்டு அகற்றப்பட்டிருக்க, பல்லேகும்புற பிரதான ஓடையையும் பாதையையும் எத்துல் போட்டானவ நிர்மாணிப்பதற்குமென ரூபா 490,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 நிதியேற்பாட்டில் ரத்தோட்டை பிரதேச செயலகத்தால் கன்சரபொல தென்னவத்தே பொக்குனே கிணற்றையும் வீதியையும் சீர்த்திருத்தஞ் செய்திருந்த போதும், அங்கு அத்தியாவசியமாக சீர்திருத்தஞ் செய்யப்பட வேண்டிய கிணற்றுக்கு அன்மித்தாக உள்ள வயல் காணிப் பாதையின் ஒரு பகுதி சீர்திருத்தப்படாது, இலகுவாகப் பயணஞ் செய்யக்கூடிய ஒரு பாதை சீர்திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது.

### 3.12 இழப்புகளும் நட்டங்களும்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது வெளியாகிய இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புகள் வருமாறு

(அ) மாவட்டச் செயலகத்தின் நிபுணத்துவ மேம்பாட்டு கூற்றிலிருந்து 2013 ஆம் ஆண்டில் காணாமற் போயிருந்த ரூபா 87,994 கூட்டுத் தொகைப் பெறுமதியான கணனிகளினதும் துணைப்பாகங்களினதும் பெறுமதியை, குறித்த நபர்களை இனங்காண்பதன் மூலம் அறவிடுவதற்கு அல்லது முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2016 ஜுன் மாதமளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 2 சம்பளங்கள் தொடர்பான ரூபா 231,951 இழப்பு தொடர்பாக 2016 ஜுன் மாதமளவிலும் பதிவழிப்பு மேற்கொள்ளப்படவோ அல்லது அறவீடு செய்வதற்கோ நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது வெளியாகிய சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களது விபரம் வருமாறு

(அ) லக்கல பல்லேகம பிரதேச செயலகம் ரூபா 980,000 செலவில் அலவாத்தாபிட்டிய அரசாங்கக் காணியில் நிர்மாணித்த உரக் களஞ்சியம் உபயோகப்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) உக்குவெல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட எல்கடுவை நகரில் ரூபா 4,199,570 மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 2,206,686 செலவழிக்கப்பட்டிருந்தபோதும், 2015 ஆம் ஆண்டில் செலவு எதுவும் மேற்கொள்ளப்பட்டிராததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்தது. 2015 ஜுன் 09 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரரின் காப்புறுதியும் விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) நாவுல பிரதேச செயலகத்தால் கிராம மக்களுக்குக் குடி நீர் வழங்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 2008 ஆம் ஆண்டின்போது ரூபா 625,338 செலவில் நிர்மாணித்திருந்த லிஹினிபிட்டிய நீர்த்திட்டத்திற்கும் 2012 ஆம் அண்டில் ரூபா 980,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஒபல்கல நீர்த்திட்டத்திற்கும் 2014 ஆம் ஆண்டில் முறையே ரூபா 15,000,000 மற்றும் ரூபா 1,000,000 என மேலதிக நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. ஏற்பாடு செய்யப்பட்ட அந் நிதியின் மூலம் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாமையால் லிஹினிபிட்டிய நீர்த்திட்டம் 8 ஆண்டு பூராவும் ஒபல்கல நீர்த்திட்டம் 4 ஆண்டு பூராகவும் நலன்பெறுநர்கள் பயன் பெறக்கூடியவாறிருக்க வில்லை.

(ஈ) ரத்தோட்டை பிரதேச செயலகத்தின் போதிகொட்டுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் ‘‘ரிட்டிகஹ எல’’ 2011 ஆம் ஆண்டில் மண்சரிவுக்குள்ளானதாலும் வயல்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்கென ரூபா 4,497,338 செலவழித்து 2011 திசெம்பர் 02 ஆந் திகதியளவிலுல் நிர்மாணித்திருந்த குழாய் நீர்மார்கள் 2015 திசெம்பரிலும் பயன்படுத்தப்படாதிருந்தது. அவ்வாறே, பொருத்தப்பட்ட நீர்க்குழாய்கள் பயன்படுத்தப்பட முடியாதவாறு சேதப்படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக, செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை.

(உ) மாத்தளை பிரதேச செயலகப் பிரிவுக்குரிய மாத்தளை மாநகர சபையின் எதிரே அமைந்துள்ள பழைய ‘‘சாட்சி கூறும் கூடத்தின்’’ கட்டிடம் 1980 முதல் வருடாந்தக் குத்தகை அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் மாநகர சபைக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய வரி நிலுவை உட்பட 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த வரி நிலுவை ரூபா 180,000 ஆகும். 2016 ஜுன் மாதமளவிலும் இக் குத்தகைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை

### 3.14 முகாமைத்துவ நலிவுகள்

அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குக் காணிகளைச் சுவீகரிக்கும்போது, மாத்தளை, லக்கல, கலேவெல, பல்லேபொல, நாவுல, இரத்தோட்டை, தம்புள்ள மற்றும் உக்குவெல ஆகிய பிரதேச செயலகங்களில் 22 சந்தர்ப்பங்களில் 06 முதல் 32 ஆண்டு வரையிலான காலதாமதம் ஏற்பட்டிருந்தபோதும், சுவீகரிப்பு நடவடிக்கைகள் முடிவடையாதிருந்தன.

### 3.15 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 52 | 45 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 29 | 18 | 11 |
| (iii) | இரண்டாந் நிலை மட்டம் | 1099 | 1084 | 15 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 113 | 109 | 04 |
| | மொத்தம் | 1293 | 1256 | 37 |